8. அரசினர் சட்ட முன்வடிவு

நிதி ஒதுக்கச் (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு, 1989

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(முற்பகல் 10–20)

9. வரவு-செலவுத் திட்டம் 1989-90—பொது விவாதம்.

*திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, நெருக்கடி என்னும் தடை, பற்றாக்குறை என்னும் கூர் அம்புகள் மட்டுமல்லாமல், திட்டமிட்ட அராஜகம் வன்முறைகளை எதிர் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர், அவர்களால் இங்கே இந்த அவை முன் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையை நான் எங்களது இந்திய மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.